1974 ஏப்ரல் 4]

பம்பாயிலுள்ள சில மார்வாடிகள் 50,000 ரூபாய் கொடுத்துவிட்டால் 5 இலட்சம் ரூபாய் தருகிறோம் என்று பல மோசடிகள் நடந்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகளெல்லாம் இருக்கின்றன. எனவே, இங்கே இருப்பவர்களுக்கு வசதி செய்து தருகின்ற வகையில் ஒரு பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷனை சென்னையிலேயே அமைக்க மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, பம்பாயில் திரைப்பட நிதியுதவிக் கழகம் இருக்கிறது, அதை மத்திய சர்க்கார் ஆரம்பித்து இருக்கிறது. தென் மாநிலங்களில் உள்ளவர்களுக்கு அதிகக் கடன் வழங்கப் படவில்லை என்று கருதி சென்னையிலே இப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நமது அரசு மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டிருக்கிறது. முடிவை எதிர் பார்க்கிறோம்.

Bamboo forests

* 759 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to take over all the bamboo forests in the private sector in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இதனுடைய முழு விவரங்களை பொதுநன்மையைக் கருதி இப்பொழுது சொல்லாமல் இருப்பது நல்லது என்று அரசு கருதுகிறது.

DR. H. V. HANDE : Once the question has been tabled in this House, the normal practice is to answer the question. If in the interests of the State the answer could not be given by the Minister, this question could have been disallowed at the earlier stage and need not have found a place in the list of questions. It could have been disallowed by the Hon. Speaker or the Hon. Minister could have stated to the Speaker earlier that it might be disallowed. But having admitted the question and when it comes before the House, I think it would not be right on the part of the Hon. Minister to say. பொது நன்மையைக் கருதி நாங்கள் சொல்லவில்லை என்று சொல்வதுமுறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகளில் அப்படி இருக்கிறது. 'அலவ்' செய்திருந்தாலும் அமைச்சர்கள் எந்த நேரத்திலும் விடையளிக்க மறுக்கலாம் என்று இருக்கிறது. எனவே, இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எதுவுமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : துணைக் கேள்விகளையாவது அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்கு விவரங்களைச் சொல்லாமல் இருப்பது நல்லது என்ற கருத்தைச் சொல்லிவிட்டபிறகு அதன் மேல் துணைக்கேள்விகளைப் போட்டால் அதே விடையைத்தான் சொல்ல வேண்டி வரும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நான் மானியக் கோரிக்கையின்பொழுது விடையளித்தபொழுதே சொல்லியிருக்கிறேன். எனவே, முழு விவரத்தையும் கூறுவது நல்லது அல்ல என்றுதான் சொல்கிறேன்.

நெல்லித்துறை மின் நிலையத் திட்டம்.

*760. வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித்துறை மின் நிலையத் திட்டப்பணிகளை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சி.டபிள்யூ பிசி யின் அனுமதியைப் பெற்று, இப்பொழுது நெல்லித்துறை திட்டம் திட்ட ஆணைக் குழுவின் அனுமதிக்காகச் சென்றிருக்கிறது. வந்தவுடன் திட்டம் ஆரம்பிக்கப் படும்.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டத்திற்கு மொத்தம் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டில் இந்தத் திட்டம் முடிவுறும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இதனுடைய முழுச் செலவின் அளவு 8 கோடியே 54 இலட்சம் ரூபாய் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய சர்க்காரின் சி.டபிள்யூ. பி.சி.யினல் அங்கீகரிக்கப்பட்டு கடைசியாகத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்காகச் சென்றிருக்கிறது. ஒப்புதல் வந்தவுடன் வேலையை ஆரம்பிக்கலாம்.